# தமிழோடு உன் புகழ் இருக்கும் !



ஏழு சுரங்கள்
அதிசயிக்கும்
இசைக்குரலே !

குறள் ஓவியம் எழுதிய
தொல்காப்பியப் பூங்கா விரலே !

கல்லறைக்குள்
தமிழ் கேட்கிறது
அலைகள்
சொல்கிறது !

உன் நினைவிடம்
நிலா அழகை
வெல்கிறது !

கலைஞர் சிலைகள்
பேருந்து நிலையம்
கலைஞர் நூலகம்
எங்கும் உன்
புகழ் மாட்சிகள் !

அனைத்துச் சாதியினரும்
அர்ச்சகர் முதல்
மாநில சுயாட்சி
தீர்ப்பு வரை
தலைவர்
மு.க.ஸ்டாலின்
வெற்றிக் காட்சிகள் !

மறக்க முடியுமா
கடிகார முள்ளாய்
தமிழரைச் சுற்றி வந்த உன்னை !

ஆணாகப் பிறந்ததால்
தாய்ப் பால் தரமுடியாது - ஆனால்
உன் மகன்தான்
எங்கள் அன்னை !

பெரியார் கைத்தடி
அறிஞர் அண்ணாவின்
எழுதுகோல்
இரண்டுமே
உன் செங்கோல் !

மண்ணிற்கு கீழே
வானத்திற்கு மேலே
உன் ஆற்றலின்
அளவுகோல் !

தொண்டர்விபத்தில் இறந்தால்
குடும்பத்திற்கு
பத்து இலட்சம்
தலைவர்
மு.க.ஸ்டாலின்
அறிவித்தார் !

தொண்டர்கள்
குடும்பத்தை
உன் மகன் போல
கலைஞர் அய்யா யார்
சிந்தித்தார் !

கலைஞரே
பசிக்கும்
எறும்புகளுக்கு
நீ-கரும்புக் காடு !

பகைக்கும்
நரிகளுக்கு
நீ -நெருப்பு வீடு !

நடிகர்களை
நட்சத்திரங்களாக
உயர்த்தியது-உன்
நாடக மேடை !

அடிமை முறையை நொறுக்கிய
தமிழரை
உயர்த்தியது
உன் பேச்சு மேடை !

தலையெழுத்து
என்றவர்களின்
உயிரெழுத்தானவரே !

தமிழர்
உயர் வெழுத்துக்கு
ஒரே
கையெழுத்தானவரே !

கலைஞரே
காற்றோடு
உன் பெயர் இருக்கும் !

தமிழோடு
உன் புகழ் இருக்கும் !



**கவிஞர்**
**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி



சேலத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் பள்ளி மாணவர்களுக்கு பாடநூல் உபகரணங்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.



நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களை அரசு தலைமை கொறடா கா.இராமச்சந்திரன் மற்றும் மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜ் உள்ளிட்டோர் வழங்கினர். நெல்லை கண்ணன், கணபதி, பீமன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளையொட்டி கோவை 35வது வட்டம் அண்ணா நகர் பகுதியில் மரக்கன்று நடும் விழா. 35 வது வட்ட அவைத் தலைவர் துரைப்பாண்டியன் ஏற்பாட்டில் மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் திருமதி மாலதி முன்னிலையில் நடைபெற்றது. இதில் முன்னாள் பகுதிச் செயலாளர் மதியழகன், வட்டச் செயலாளர் குமரேசன், மாமன்ற உறுப்பினர் சம்பத் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# ஈடு இணையிலா இலக்கியப் பெருவேந்தர் "முத்தமிழ் அறிஞர்" கலைஞர்!

தலைவர் கலைஞர் அவர்கள்
நின்றால் பொதுக் கூட்டம்,
நடந்தால் ஊர்வலம்,
பேசினால் மாநாடு! என்று
மதிப்பிற்குரிய அண்ணன் துரைமுருகன் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள்
உதிர்த்தால் பொன்மொழி,
உரையாடினால் கவிதை,
உரையாற்றினால் காவியம்! என்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பே நான் முரசொலியில் எழுதினேன்.

உண்ணும்போதும், உலவும்போதும், உறங்கும்போதும், எண்ணும்போதும், எழுதும்போதும், இயங்கும்போதும்,

"தமிழ்! தமிழ்" என்றே வாழ்ந்த தலைவர் கலைஞர் அவர்கள்,

கவியரங்குகளில் மட்டுமல்ல!

சகஜமாக மற்றவர்களுடன் உரையாடும் போதும்,

மேடைகளில், சட்டமன்றில், மணவிழா உள்ளிட்ட குடும்ப நிகழ்வுகளில் உரையாற்றும் போதும்,

நாடகம், திரைப்படங்களில் வசனம் எழுதும்போதும், கதை, கட்டுரைகள் வரையும் போதும், முரசொலியில் கடிதங்கள் தீட்டும் போதும்,

ஊடகவியலாளர்களின் உள்நோக்கம் நிறைந்த வினாகணைகளின் முனை முறிந் துப் போகும் வண்ணம் பதில் சொல்லும் போதும்,

அவரிடம் வெளிப்படும் வார்த்தைகளும், வாசகங்களும் கவித்துவம் நிறைந்ததாகவே விளங்கும்.

கவிதை என்ற பெயரில் பலர், உரைநடை எழுதிக்கொண்டிருந்த நேரத்தில், உரைநடையையும் கவித்துவமாக எழுதிக் குவித்தவர் தலைவர் கலைஞர். அதனால் தான் கலைஞரின் உரைநடைக்குக்

"கவிவசனம்" என்று பெயர்சூட்டினார் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள்.

18.11.1983 அன்று, புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் தி.மு.க.செயலாளர், அண்ணன் க.சிதம்பரம் அவர்களின் புதல்வி மாதவி திருமணத்தைக் காலையில் தலைமை தாங்கி நடத்தி முடித்து, மாலையில் பட்டுக்கோட்டை கம்பன் விழாவுக்காகத் தலைவர் கலைஞர் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஐயா மன்னை அவர்களும், அண்ணன் கோ.சி.மணி அவர்களும் வரவேற்று அழைத்துச்செல்லக் காத்திருந்தனர். மாவட்டச் செயலாளர் அண்ணன் பெரியண்ணன், அண்ணன் க.வீரையா, அண்ணன் கீரை. ஆ.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகிகள் தலைவர் அவர்களை வழியனுப்பத் தயாராக நின்றுகொண்டிருந்தோம். கார் அருகில் வந்த தலைவர் கலைஞர் அவர்கள்,

இருதரப்பினரையும் பார்த்து, அழகிய புன்சிரிப்பை உதிர்த்தவாறே,

"வருபவர்கள் உடன்வரலாம்!
வராதவர்கள் விடைதரலாம்!" என்று

கணீர் என்ற தனது காந்தக்குரலில் வெளிப்படுத்திய வாசகத்தைக் கேட்டு,

சுற்றியிருந்த தோழர்கள் கொட்டி எழுப்பிய கைத்தட்டல் ஓசையும், மகிழ்ச்சி ஆரவார ஒலிமுழக்கமும் வானைப்பிளந்தது.

1989 சட்டமன்றத் தேர்தலில் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியின் கழக வேட்பாளர் நான்.

தலைவர் அவர்கள் முதற்கட்டத் தேர்தல் பிரச்சாரத்தை முடித்துவிட்டுத் திருச்சியிலிருந்து சென்னை செல்லப் புறப்படும் வேளையில், தொடர்வண்டியில் அமர்ந்திருந்த தலைவர் அருகில் பணிவுடன் சென்று நின்றேன்.

என்னைப் பார்த்து "எவ்வளவு செலவு செய்வாய் தேர்தலில்?"என்று தலைவர் அவர்கள் கேட்டதும்,

"முடிஞ்சவரைக்கும் செய்யுறேன் ஐயா" என்றேன்.. அதாவது செலவு செய்யும் அளவுக்கு வசதி இல்லை என்னும் பொருளில்.

அப்படியே நான் சொன்ன பதிலுக்கு நேர் எதிர்மறைப் பொருளைத் தரும்வண்ணம்,

"அப்படி எவ்வளவுயா முடிஞ்சு வச்சிருக்கே?"

என்று தலைவர் அவர்கள் கேட்டதும், அருகில் இருந்த ஐயா அன்பிலார், அருமை அண்ணன் நேரு அவர்கள் உள்ளிட்ட அனைவரும் சிரித்த சிரிப்பில் அந்த இரயில் பெட்டியே சற்றுக் குலுங்கி நின்றது.

கழக முப்பெரும் விழாக் கவியரங்கம் சென்னையில், கலைவாணர் அரங்கில், தலைவர் கலைஞர் தலைமையில். கவிஞர்களின் கவிதைப் பார்வையனைத்தும், தலைவர் அவர்களின் தலை வழுக்கையிலேயே மையம் கொண்டிருந்தது அந்தக் கவியரங்கில்.

நானும் இப்படிக் கவிதை பொழிந்தேன்.
"நிலைவழுக்கிப் போகாத
தலைவ னே, நீ
நேர்மைக்குச் சிறகடிக்கும்
வானம் பாடி!
தலைவழுக்கை அல்ல!
இது
தினமும் வந்து
தமிழன்னை முகம்பார்க்கும்
நிலைக்கண் ணாடி!"
என்று பாடி முடித்ததும்



பலத்த கரவொலி எழுந்தது.

தலைமை தாங்கியிருந்த தலைவர் அவர்கள், நான் கவிபொழிந்து முடித்த மறுகணமே ஒலிபெருக்கியைப் பிடித்து,

" வண்ணக் கவிஞன்
கவிதைப் பித்தன்
வழுக்கையைப் படம்பிடித்தான்! என்
மனதில் இடம் பிடித்தான்!
அன்புத் தம்பி
கவிதைப் பித்தா,
அங்கென்ன வாழ்கிறது?.. உனக்கு
வழுக்கை ஏன்வந்தது?
எண்ணத் தால்,நான்
இளமையோ டுள்ளேன்!
இளநீர் வழுக்கைஇது!
ஏறட்டும் உனக்கும்அது!"

என்று பொழிந்து முடித்ததும், கலைவாணர் அரங்கமே அதிர்ந்துபோகும் வண்ணம் கைத்தட்டல் ஒலியும், சிரிப்பொலியும் கைகோத்துக் கொண்டதை அன்று கண்டு கேட்டு மகிழ்ந்தவர்கள் இன்றும் மறக்க முடியாது.

1996 ஆம் ஆண்டு கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரம்.

ஜெயின் கமிஷன் அறிக்கையில் வரும் சில வாசகங்களை ஆயுதமாகப் பயன் படுத்திக்கொண்டு, இனப்பகைவர்கள், அன்றைக்கு ஓர் அம்மையாரின் தலைமையில், கழக ஆட்சியைக் கவிழ்க்கும் சதியில் ஈடுபட்டிருந்தனர்.

எந்த நேரமும் கழக ஆட்சி கவிழும் என்று சில ஏடுகளும் ஜோசியம் சொல்லிக் கொண்டிருந்த அந்த நேரத்தில், கலைவாணர் அரங்கில் கவியரங்கம்.

தன்னேரில்லாத் தமிழ்ப் பெருங்கவிஞர் அண்ணன் மு.மேத்தா அவர்கள் கவிபாட வந்து,

"ஓ..ஜெயின்!
உம்மால் தமிழன்னை நெஞ்சில் பெயின்!
அவள் கண்ணில் ரெயின்!"

என்பன போன்ற வரிகளை வழங்கிச் சென்றார். அடுத்து வந்த நான்,

ஆத்தா நினைத்தவுடன்
அவசரமாய் கலைக்க,இது
கூத்தா நல்லூரா?
கருப்பை என்றால்
கலைத்து விடலாம்! கலைஞர் என்னும்
நெருப்பைக் கலைக்கஒரு
நீர்க்குமிழி துள்ளுவதா?
தருப்பைப் புல்ஒன்று
இமயத்தைத் தள்ளுவதா?
செருப்பைத் தமிழ்மக்கள்
சேகரித்து வைத்துள்ளார்!.. அவர்
விருப்பத்தில் கைவைத்தால்
விபரீதம் உண்டாகும்!"

என்று கனல்கக்கும் கவிபொழிந்து முடித்தேன்.

கவியரங்கம் முடிந்ததும் கவிஞர்கள் அனைவரும் தலைவர் கலைஞர் அருகில் சென்று நின்றோம்.

" கூத்தாநல்லூர் ஆத்தா பற்றிக்
கவிபாடிய கவிதைப் பித்தா!
எங்கே கவிஞர் மேத்தா?" என்றார் தலைவர்.

பின்னால் நின்றுகொண்டிருந்த அண்ணன் மேத்தா, தலைவர் முன்னால் வந்து நின்றார்.

"மேத்தா! உங்கள் கவிதை இன்று fine !
ஆங்கில வார்த்தைகளைக் கவிதையில் அதிகம் பயன்படுத்தியதால்
உங்கள் மீது போடவேண்டும் fine !" என்று

ஒரு போடு போட்டார். ஒரே ஆங்கில வார்த்தையை இரு பொருள்படத் தலைவர் அவர்கள் கூறியதைக் கேட்ட கவிஞர்கள் மட்டுமல்ல! அருகில் நின்று கொண்டிருந்த அனைவருமே விலாவெடிக்கச் சிரித்து மகிழ்ந்ததை மறக்கவும் முடியுமோ?

ஈழத்தில் இனப்படுகொலை
(Genocide) நடைபெற்ற கொடிய நாட்கள்.

தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் போன்றவர்களின் கண்களைத் துப்பாக்கிகளின் கத்தி முனைகளால் பிடுங்கி எறிந்து, இந்தக் கண்களால்தானே தமிழ்ஈழத்தைக் காணத் துடிக்கின்றீர்கள் என்று சிங்களக் காடையர்கள் கொக்கரித்த நேரம்.

கடலில், படகில் தப்பித்து வந்த இலங்கைத் தமிழர்களைத் துரத்தி வந்து, கடலிலேயே துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்குகின்றன அந்தச் சிங்கள மிருகங்கள்! அந்தக் காட்சியைப் பொதுக்கூட்ட மேடையில் விவரித்துக் கொண்டே வந்த தலைவர் கலைஞர் அவர்கள்,

" படகே அவர்களின்
பாடை ஆனது!
கடலே சுடு காடானது"

என்று சோகம் ததும்பும் நிகழ்வைக் கூட கவிதை நயத்துடன் கூறிய கற்பனை அழகு எவருக்கு வரும்?

1996 தி.மு.க.ஆட்சிப் பொறுப்பில்.அன்றைய தமிழ் மாநிலக் காங்கிரஸ் மூப்பனார் அவர்கள் தலைமையில் கழகக் கூட்டணியில் இடம்பெற்றிருந்த நேரம். கழகத்திற்கும் தமிழ் மாநிலக் காங்கிரசுக்கும் விரிசல் ஏற்படுத்தும் விஷம எண்ணத்துடன் நிருபர் ஒருவர் தலைவர் கலைஞர் அவர்களிடம் பேட்டி ஒன்றில், இப்படிக் கேட்டார்.

"தி மு.க.வுக்கும், த.மா.கா.வுக்கும் இடையில் ஏதோ சிக்கல் இருக்கிறதாமே?"

கண்ணிமைக்கும் கணப்பொழுதில் தலைவர் கலைஞர் சொன்ன பதில் இதோ!

" எனக்குத் தெரிந்து
திருவாரூருக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையில்தான்
" சிக்கல்" இருக்கிறது.
தி.மு.க.வுக்கும்
த.மா.கா.வுக்கும் இடையில் இல்லை!

கேள்வி கேட்ட செய்தியாளர் சிரிப்பு அடங்கவே நெடுநேரம் ஆனது.

வீரன் ஒருமுறைதான்
சாகின்றான்.
கோழை செத்துச் செத்துப் பிழைக்கின்றான் என்பீர்கள்!
ஒரு சிறு திருத்தம்...
வீரன் சாவதே இல்லை!
கோழை வாழ்வதே இல்லை! என்று எழுதிய தலைவர் கலைஞர்தான்,

"பிரபாகரன் உயிரோடு இருக்கின்றாரா?
இறந்து விட்டாரா?" என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு,

"மாவீரர்களுக்கு
மரணமே கிடையாது!"
என்று உறுதி குலையாத பதிலிறுத்தார்!

வீழ்வது நாமாயினும்
வாழ்வது தமிழாகட்டும்!

என்னும் கலைஞரின் முழக்கம் தமிழ்ப் பெருங்குடி மக்களின் நெஞ்சமெனும் கல்வெட்டில் நிலைத்துவிட்ட வரிகள் அல்லவா?

உறவுக்குக் கை கொடுப்போம்!
உரிமைக்குக் குரல்கொடுப்போம்!
என்னும் கவித்துவ முழக்கம்,

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உரிய சித்தாந்த உறுதிப்பாட்டின் தத்துவ விளக்கம் அல்லவா?

விவேகம் என்னும்
வெள்ளி முளைத்து,
சாதிப்பித்து எனும்
சனி தொலைந்தால்தான்
சமத்துவம் என்னும்
ஞாயிறு பூக்கும்!
என்பது சமத்துவபுர வாசகம் மட்டுமா?
சமூக நீதிக் காவியமல்லவா!
அண்ணா வழியில்
அயராதுழைப்போம்!
ஆதிக்கமற்ற சமுதாயம்
அமைத்தே தீருவோம்!
இந்தித் திணிப்பை
என்றும் எதிர்ப்போம்!
வன்முறை தவிர்த்து
வறுமையை வெல்வோம்!
மாநிலத்தில் சுயாட்சி! மத்தியில் கூட்டாட்சி!

கழகத்தின் உயிர்நாடிக் கொள்கைகள் என்று தலைவர் கலைஞர் அவர்கள் நமக்கு வழங்கிச் சென்ற இந்த ஐம்பெரு முழக்கமே

மோனை நயம் குன்றாத முத்தமிழ்க் கவிதை தானே?


கீதாஞ்சலியினும் கீர்த்தி பெற்ற
உயிர்ப்புமிக்க கவிதையல்லவா,
பேரறிஞர் அண்ணாவுக்குத்
தலைவர் கலைஞர் அவர்கள் தன் கண்ணீரை மையாக்கித் தீட்டிய கவிதாஞ்சலி!

ஈடு, இணையில்லாத இலக்கியப் பெருவேந்தர்,

தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றிஇரண்டாம் ஆண்டு பிறந்தநாளை எட்டுத் திசையும்

கொண்டாடி மகிழும் இந்தத் தருணத்தில் மட்டுமல்ல! இனிவரும் அத்தனை நூற்றாண்டுகளிலும் தமிழ்கூறும் நல்லுலகத்தால், தலைமீது வைத்து அவர் கொண்டாடப் படுவார்!

ஆண்டுகள் ஆயிரம் உருண்டாலும்
அவரை நினைக்கும் மனிதகுலம்!
ஆருயிர்த் தலைவரை வணங்கும் நமக்கு
அறிவா லயம்தான் புனிதத்தலம்!
மீண்டும் ஒருமுறை பிறந்தாலும்
வேண்டிநிற் பேன்ஓர் அன்புவரம்!
மேலும் அவர்க்கே உடன்பிறப்பாய்
பிறக்க வேண்டும்நான் நூறுதரம்!



**கவிச்சுடர்**
**கவிதைப் பித்தன்**

# தமிழர்களின் பெருமைமிகு அடையாளம் இசைஞானி இளையராஜா!

## பிறந்தநாளையொட்டி — முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன் 4-

பலதரப்பட்ட இசைகளில் கரைகண்டு தமிழர்களின் பெருமைமிகு அடையாளமாகத் திகழ்கிறார் இசைஞானி இளையராஜா என்று அவரது பிறந்தநாளில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இசைஞானி இளையராஜா அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**நாட்டுப்புற இசை, மெல்லிசை, துள்ளலிசை, மரபிசை, தமிழிசை, மேற்கத்திய இசை என அனைத்திலும் கரைகண்டு தமிழர்களின் பெருமைமிகு அடையாளமாகத் திகழும் இசை ஞானி இளையராஜா அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**தங்களின் சிம்பொனி இசை தமிழ்நாட்டில் ஒலிக்கவுள்ள ஆகஸ்ட் 2ஆம் நாளுக்காகக் கோடிக்கணக்கான இரசிகர்களில் ஒருவனாக நானும் காத்திருக்கிறேன்.**

**நேற்றும் இன்றும் என்றும் தங்கள் இசை ராஜாங்கத்தின் ஆட்சிதான்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### தொலைபேசி மூலம் வாழ்த்து!

மேலும், இசைஞானி இளையராஜா அவர்களை தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்தநாள் வாழ்த்தினை தெரிவித்துக்கொண்டார்.

---

சென்னை மாணவியின் வழக்கில் கடும் தண்டனை பெற்றுத் தந்துள்ளோம்

# சின்ன புத்தி கொண்டோரின் எண்ணம் தவிடு பொடியாகியுள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 4 -

**சென்னை மாணவியின் வழக்கில் கடும் தண்டனை பெற்றுத் தந்துள்ளோம். சின்ன புத்தி கொண்டோரின் எண்ணம் இதன் மூலம் தவிடு பொடியாகியுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

அது வருமாறு :

பெண்கள் பாதுகாப்பு பற்றி வேடம் போடுபவர்களுக்குச் செயலால் பதில் அளித்திருக்கிறது தமிழ்நாடு காவல் துறை!

விசாரணையின் போது, உயர்நீதிமன்றமே பாராட்டிய வகையில், சென்னை மாணவி வழக்கினை நியாயமாகவும் விரைவாகவும் ஐந்தே மாதத்தில் நடத்தி முடித்து, குற்ற வாளிக்குக் கடும் தண்டனையைப் பெற்றுத் தந்திருக்கிறோம்.

தீர்ப்பு வெளியாகியுள்ள நிலையில் இந்த வழக்கில் காவல்துறை சிறப்பாகச் செயல்பட்டுள்ளதாக மகளிர் நீதிமன்றமும் முன்வந்து பாராட்டி இருக்கிறது. இளம்பெண் ஒருவருக்கு நிகழ்ந்த அநீதியில் கூட அரசியல் ஆதாயம் தேட நினைக்கும் சின்ன புத்தி கொண்ட சிலரின் எண்ணம் இதனால் தவிடுபொடியாகியுள்ளது.

பாலியல் குற்றவாளிகளுக்கு முன்விடுதலை கிடையாது என அண்மையில் நாம் கொண்டு வந்த சட்டத்திருத்தத்துக்கு ஏற்ப, இவ்வழக்கில் remission உள்ளிட்ட எந்தச் சலுகையும் இல்லாமல் கடுங்காவல் தண்டனை விதித்துள்ள நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு நன்றிகூறி வரவேற்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

---

இல்லாத சார்களை உருவாக்கி

# இழிவான அரசியல் செய்கிறார் எடப்பாடி பழனிசாமி சார்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

சென்னை, ஜூன். 4-

**இல்லாத சார்களை உருவாக்கி இழிவான அரசியல் செய்யும் ஒரே சார் பழனிசாமி சார்தான்! என்றும் திராவிட மாடல் அரசு எடுத்த உறுதியான நடவடிக்கைகளால் 5 மாதங்களில் வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு அண்ணா பல்கலைக் கழகப் பாலியல் வழக்கில் நீதிமன்றத்தில் தீர்ப்பு பெறப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் ரகுபதி அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

அண்ணா பல்கலைக்கழகப் பாலியல் வழக்கில் திராவிட மாடல் அரசு எடுத்த உறுதியான நடவடிக்கைகளால் 5 மாதங்களில் வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் தீர்ப்பு பெறப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழக வழக்கில் 60 நாட்களுக்குள் குற்றப் பத்திரிக்கைத் தாக்கல் செய்யப்படும் எனச் சட்டமன்றத்தில் முதலமைச்சர் அறிவித்தார்கள், அதே போல 60 நாட்களில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.



### வலுவான வாதங்கள் மூலம் விரைவாகத் தீர்ப்பு!

நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு எடுத்து வைத்த சாட்சியங்கள், வலுவான வாதங்களின் மூலம் விரைவாகத் தீர்ப்பு பெறப்பட்டு நீதி உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதிலும் பாதிக்கப்பட்டோருக்கான நீதியை விரைவாகப் பெற்றுத்தருவதிலும் முதலமைச்சரும் அவர் தலைமையிலான திராவிட மாடல் அரசும் காட்டும் உறுதிப்பாட்டிற்குக் கிடைத்த வெற்றியாக அமைந்திருக்கிறது இந்தத் தீர்ப்பு.

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்காக உண்மையான நடவடிக்கை எடுக்காமல் இழுத்தடித்த பழனிசாமியால்தான் அந்த வழக்கில் நீதிக் கிடைக்க 6 ஆண்டுகள் ஆனது. ஆனால் ஐந்தே மாதங்களில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதிக் கிடைக்கச் செய்திருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர்.

### புளுகு மூட்டைகளை அவிழ்த்து விடுகிறார் பழனிசாமி!

அந்த வயிற்றெரிச்சலில் என்ன செய்வதென்று தெரியாமல் வழக்கம்போலத் தனது புளுகு மூட்டைகளை அவிழ்த்து விட்டிருக்கிறார் பச்சைப் பொய் பழனிசாமி.

இந்த வழக்கில் உண்மையான குற்றவாளி ஞானசேகரன் தான் என நீதிமன்றம் உறுதி செய்திருப்பதன் மூலம் தமிழ்நாட்டு மாணவிகளை அச்சுறுத்தி அவர்களைக் கல்விநிலையங்களுக்குச் செல்ல விடாமல் அச்சுறுத்த வேண்டும் எனும் அற்பபுத்தியோடு 'யார் அந்தச் சார்?' என அருவருப்பு அரசியல் செய்த பழனிசாமியின் இழிவான அரசியல் அம்பலப்பட்டிருக்கிறது.

"அமைச்சர்களுடன் படம் எடுத்ததற்காக முக்கியப் பிரமுகர்களுடன் தொடர்பு எனக் குற்றம்சாட்ட முடியாது" என உயர் நீதிமன்றமே தலையில் கொட்டிய போதும் திருந்தாமல் பெண்களை அச்சுறுத்தி அவர்களது படிப்பை முடக்க வேண்டும் என்பதற்காக 'யார் அந்தச் சார்?' என புரளியை வைத்து மலின அரசியல் செய்து வந்தார் பழனிசாமி

உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலில் அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழுவும் தனது அறிக்கையிலும் ஞானசேகரன் யாருடனும் பேசவில்லை அவனின் செல்போன் 'flight Mode' இல் தான் இருந்ததும், அவன் யாருடனும் பேசவில்லை என்பதும் அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தியது.

பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதிப் பெற்று தருவதை விட இந்த நிகழ்வை வைத்து தி.மு.க.வின் மீது எப்படியாவது களங்கம் சுமத்தலாம் எனக் கேவலமான அரசியல் செய்து வந்த அற்பபுத்தி பழனிசாமியின் புரளி நாடகம் தோற்றுப் போனபோதும் கொஞ்சம் கூட வெட்கமே இல்லாமல் மீண்டும் அதே பொய்யை தூக்கி கொண்டு வந்திருக்கிறார் பச்சைப்பொய் பழனிசாமி

இல்லாத சார்களை உருவாக்கி இழிவான அரசியல் செய்யும் ஒரே சார் பழனிசாமி சார்தான். இது போன்று பொய் புரளிகளை வைத்து பித்தலாட்ட அரசியல் செய்வதையே முழுநேர தொழிலாகச் செய்து கொண்டிருக்கும் பழனிசாமி இன்று போல் உண்மைகளால் தொடர்ந்து அவமானப் படப் போவது உறுதி!

### எந்தக் குற்றவாளியும் தப்ப முடியாது!

தமிழ்நாட்டு பெண்களின் உரிமைகளை உயர்த்தி அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் நுனியளவு சமரசத்திற்கு இடம்தராமல் ஆட்சி செய்யும் முதலமைச்சரின் ஆட்சியில் பெண்களுக்குத் துன்பம் விளைவிக்கும் எந்தக் குற்றவாளியும் தப்ப முடியாது என்பதற்கு அண்ணா பல்கலைக்கழக வழக்கின் தீர்ப்பே சாட்சி!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

நார்வே செஸ் 2025 தொடரில்

மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்தினார்!

# செஸ் வீரர் குகேஷ் சிறப்புமிகு பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!



சென்னை, ஜூன் 4

நார்வே செஸ் 2025 தொடரில் மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்திய குகேஷ்க்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**நார்வே செஸ் 2025 தொடரில் மேக்னஸ் கார்ல்சனை கிளாசிக்கல் பிரிவில் வீழ்த்தியமைக்காக குகேஷ் அவர்களுக்குப் பாராட்டுகள்!**

**இந்திய செஸ்சுக்கு இது பெருமைமிகு தருணம், குகேஷ் அவர்களின் சிறப்புமிகு பயணத்தில் இது ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்!**

**உலக செஸ் அரங்கில் இந்தியாவின் உறுதியான வளர்ச்சியில் இது மற்றுமொரு திடமான படி!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

சேலம் மாவட்டத்தில்

# 99,606 மாணவ - மாணவிகளுக்கு - கல்வி உபகரணங்கள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கி சிறப்புரை!

சேலம், ஜூன் 4 -

முதலமைச்சர் அவர்கள் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 99,606 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு புதிய பாட நூல்கள், சீருடைகள் மற்றும் கல்வி உபகரணப் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்களுக்கு புதிய பாட நூல்கள், சீருடைகள் மற்றும் கல்வி உபகரணப் பொருட்களை வழங்கினார்கள்.

முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு புதிய பாட நூல்கள், சீருடைகள் மற்றும் கல்வி உபகரணப் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம், கோட்டை நகரவை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி மற்றும் மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்களுக்கு புதிய பாட நூல்கள், சீருடைகள் மற்றும் கல்வி உபகரணப் பொருட்களை வழங்கினார்கள்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் கல்வியும், மருத்துவமும் இரண்டு கண்களாகக் கருதி சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அதற்கேற்ப, பள்ளிக் கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவமும் அளித்து அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு சிறப்பானத் திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்.

### எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

அந்தவகையில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம், பேராசிரியர் அன்பழகனார் கல்வி மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், வகுப்பறை உற்று நோக்கு செயலி, முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம், இளந்தளிர்

இலக்கியத் திட்டம், மாதிரிப் பள்ளிகள், தகைசால் பள்ளிகள், ஸ்மார்ட் வகுப்பறைகள் போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு புதிய பாட நூல்கள், சீருடைகள் மற்றும் கல்வி உபகரணப் பொருட்களை வழங்கித் தொடங்கி வைத்தார்கள். இதனைத்தொடர்ந்து, சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கோட்டை நகரவை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 421 பள்ளி மாணவர்களுக்கு புதிய பாட நூல்கள், சீருடைகள் மற்றும் கல்வி உபகரணப் பொருட்கள் வழங்கி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் அரசு பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதி தொடக்க, நடுநிலைப் பள்ளிகள் என 1,640 பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் 67,700 மாணவ, மாணவிகளும், ஆங்கில வழியில் 31,906 மாணவ, மாணவிகளும் பயின்று வருகின்றனர். அதன்படி 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தமிழ் வழியில் 67,700 பாடநூல்களும், ஆங்கில வழியில் 31,906 பாடநூல்களும் வழங்கப்படுகின்றது.

மேலும், அரசு பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் என 350 பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் 1,16,954 மாணவ, மாணவிகளும், ஆங்கில வழியில் 61,814 மாணவ, மாணவிகளும் பயின்று வருகின்றனர். அதன்படி 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தமிழ் வழியில் 6,36,357 பாடநூல்களும், ஆங்கில வழியில் 2,33,134 பாடநூல்களும் வழங்கப்படுகின்றது.

அதேபோன்று, சேலம் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் 2,697 அங்கன்வாடி மையத்தில் பயின்றுவரும் 2 முதல் 5 வயது வரையுடைய 59,179 குழந்தைகளுக்கு தலா 2 சீருடைகள் வழங்கும் விதமாக, அங்கன்வாடி மையத்தில் பயிலும் குழந்தைகளுக்கு சீருடைகள் வழங்கி தொடங்கி வைக்கப்பட்டது.

### பள்ளி திறக்கும் முதல் தினமே பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டன!

பள்ளிகள் திறக்கும் முதல் நாளான இன்றைய தினமே அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் பாட நூல்கள், நோட்டு புத்தகங்கள், புத்தகப் பைகள் மற்றும் இதர கற்றல் உபகரணங்கள் அனைத்தும் வழங்கப்படுகின்றது. பாட நூல்கள் உள்ளிட்ட கற்றல் உபகரணங்களைப் பெற்றுக்கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் இளங்கோவன், முதன்மைக் கல்வி அலுவலர் மு.கபீர், துணை மேயர் திருமதி மா. சாரதாதேவி, அஸ்தம்பட்டி மண்டலக்குழுத்தலைவர் திருமதி செ. உமாராணி, மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) செ. நரசிம்மன், பள்ளி மேலாண்மைக்குழுத் தலைவர் திருமதி ரேவதி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் நாசர் கான் (எ) அமான் உள்ளிட்ட தொடர்புடைய அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் சென்னையில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான பாடபுத்தகங்கள் மற்றும் சீருடைகள் வழங்கியதை தொடர்ந்து, திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 900 மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன், ஒன்றியச் செயலாளர் ஆர்.பாலச்சந்திரன், பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன், முதன்மை கல்வி அலுவலர், சௌந்திரராஜன், பேரூராட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி, தலைமை ஆசிரியர் பூந்தமிழ் பாவை இருபால் ஆசிரியர்கள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

---




தி.மு.க.

இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அறிவிப்பு

**ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!**

திருச்சி தெற்கு, திருச்சி வடக்கு மற்றும் திருச்சி மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 04.06.2025 புதன்கிழமை | காலை 9.30 மணி | திருச்சி வடக்கு | ஸ்ரீ தனலட்சுமி மணி மஹால், உளுந்தங்குடி பைபாஸ் சாலை பாலம் அருகில், மண்ணச்சநல்லூர், திருச்சி. |
| | மாலை 4.00 மணி | திருச்சி மத்திய | கலைஞர் அறிவாலயம், கரூர் பைபாஸ் சாலை, திருச்சி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-06-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி